செய்தி வெளியீடு எண்: 135 நாள்: 17.02.2020

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களின் சீரிய தலைமையிலான மாண்புமிகு அம்மாவின் அரசு பொறுப்பேற்று மூன்று ஆண்டுகள் நிறைவு பெற்றதையொட்டி, செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் தயாரிக்கப்பட்ட மாண்புமிகு அம்மா அரசின் – ''முத்திரை பதித்த மூன்றாண்டு முதலிடமே அதற்குச் சான்று'' என்ற மூன்றாண்டு சாதனை மலர்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்), மாவட்டம் வாரியாக தொகுக்கப்பட்ட அரசின் மூன்றாண்டு சாதனை மலர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரைகளின் தொகுப்பு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகளின் தொகுப்பு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் 110 விதியின் கீழ் அறிவித்த அறிவிப்புகளின் தொகுப்பு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரைகளிலிருந்து தொகுக்கப்பட்ட முத்தான கருத்துரைகள், மூன்றாண்டு சாதனைகளின் குறும்படம் மற்றும் காலப் பேழை புத்தகம் ஆகியவற்றை தலைமைச் செயலகத்தில் இன்று (17.2.2020) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் வெளியிட்டார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசு, கடந்த மூன்றாண்டுகளில், காவேரி டெல்டா பகுதிகளை பாதுகாக்கப்பட்ட சிறப்பு வேளாண் மண்டலமாக அறிவித்தது, நீர் நிலைகளை பாதுகாக்க குடிமராமத்துத் திட்டம், நிர்வாக வசதிக்காக 5 புதிய மாவட்டங்களை உருவாக்கியது, 11 மாவட்டங்களில் புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வெளிநாட்டு பயணங்களின் மூலம் ரூ.8,835 கோடி முதலீடுகளை ஈர்த்தது, 2.05 கோடி குடும்பங்களுக்கு பொங்கல் பண்டிகையை சிறப்பாக கொண்டாட பொங்கல் பரிசுடன் ரூ.1000 ரொக்கம், விவசாயிகளின் நலனுக்காக காவேரி மற்றும் அதன் கிளை ஆறுகள் மாசுபடுவதிலிருந்து முழுமையாக மீட்டெடுக்க ''நடந்தாய்

வாழி காவேரி திட்டம்'', சேலம் மாவட்டம், தலைவாசல் பகுதியில் சர்வதேச தரத்தில் ஒருங்கிணைந்த கால்நடை ஆராய்ச்சிப் பூங்கா அமைத்தல், மகளிர் பாதுகாப்பிற்காக ''காவலன் செயலி'', தமிழ்நாடு இ–வாகன கொள்கை–2019 வெளியிட்டது, விளையாட்டு வீரர்களுக்கு வேலைவாய்ப்பில் 3 சதவிகித இடஒதுக்கீடு, மாணவர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு கல்வி தொலைக்காட்சி என எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களை பல்வேறு துறைகளின் மூலம் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசு மேற்கொண்ட எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களை அங்கீகரிக்கும் வகையில், மத்திய அரசின் நல் ஆளுமைத் திறனுக்கான தரவரிசையில் தமிழ்நாடு முதலிடம், கிருஷி கர்மான் விருதினை 5 முறை பெற்றது, ஊராட்சிகளில் மின்னணு ஆளுமை, வலிமைப்படுத்துதல், குழந்தைகள் நேயம், வலுவான கிராம சபை செயல்பாட்டிற்கென 12 தேசிய விருதுகள், உடல் உறுப்பு தானத்தில் 5 முறை தேசிய விருது, ஊரக வளர்ச்சித்துறையின் சிறப்பான செயல்பாட்டிற்காக 104 விருதுகள், இணைய வழி கற்றலில் முன்னோடி மாநிலத்திற்கான தேசிய விருது, மூத்த குடிமக்கள் சேவைக்காக தேசிய விருது என பல்வேறு விருதுகளையும், அங்கீகாரங்களையும் தமிழ்நாடு அரசு பெற்று தொடர்ந்து முன்னேறி வருகிறது.

''எனக்குப் பின்னாலும், இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் வந்தாலும், இந்த ஆட்சியும் இயக்கமும் மக்களுக்காகவே பணியாற்றும்'' – என்ற புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வாக்கினை நிறைவேற்றும் வகையில், பரந்த பாரதத்தில் தன்னிகரற்ற மாநிலமாய்த் தமிழ்நாடு தழைத்திட அர்ப்பணிப்போடு நல்லாட்சி நடத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களின் சீரிய தலைமையிலான அரசு பொறுப்பேற்று மூன்று ஆண்டுகள் நிறைவு பெறுவதையொட்டி, செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் தயாரிக்கப்பட்ட மாண்புமிகு அம்மா அரசின் – ''முத்திரை பதித்த மூன்றாண்டு முதலிடமே அதற்குச் சான்று'' என்ற மூன்றாண்டு சாதனை

மலர்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்), மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரைகள், சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ் அறிவித்த அறிவிப்புகள், பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள் ஆகியவற்றினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று வெளியிட மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாவட்டம் வாரியாக தொகுக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் மூன்றாண்டு சாதனை மலர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரைகளிலிருந்து தொகுக்கப்பட்ட முத்தான கருத்துரைகள், மூன்றாண்டு சாதனை குறும்படங்களின் குறுந்தகட்டினை வெளியிட, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், காலப்பேழை புத்தகத்தினை (Coffee Table Book) வெளியிட தலைமைச் செயலாளர் திரு. க.சண்முகம், இ.ஆ.ப., அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்கள். செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் முனைவர் பொ. சங்கர் இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரை ஆற்றினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**